# நஞ்ச ராசன் கதை


பதிப்பாளர்

**மு. அம்பாள்**

நெறியாளர்

**வீ. அரசு**

பேராசிரியர்



**தமிழ் இலக்கியத்துறை**

சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னை-600 005.

2011

# நஞ்ச ராசன் கதை

**"சுவடியியலும் பதிப்பியலும்"**
பட்டயப்பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு


பதிப்பாளர்
**மு. அம்பாள்**

நெறியாளர்
**வீ. அரசு**
பேராசிரியர்



**தமிழ் இலக்கியத்துறை**
சென்னைப் பல்கலைக்கழகம்
பரிதிமாற் கலைஞர் வளாகம்
சென்னை - 600 005

செப்டம்பர் 2011

**“சுவடியியலும் பதிப்பியலும்”**

2010 - 2011 ஆம் ஆண்டிற்கான

பட்டயப்பேற்றிற்காகச்

சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு

அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிவு எண் : 43011050

வீ. அரசு
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005

# நெறியாளர் சான்றிதழ்

சென்னைப் பல்கலைக்கழக, சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப்பேற்றிற்காக 2010 - 2011 ஆம் கல்வியாண்டில் நஞ்ச ராசன் கதை எனும் தலைப்பில் உருவாக்கப்பட்டுள்ள இப்பதிப்பேடு என்னுடைய மேற்பார்வையின்கீழ் முதுகலை மாணவர் மு. அம்பாள் அவர்களால் அவரின் சொந்த முயற்சியில் உருவாக்கப்பட்டது என்று சான்றளிக்கின்றேன்.

நாள் :
இடம் : சென்னை -5

(வீ. அரசு)
நெறியாளர்

மு. அம்பாள்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005

## பதிப்பாளர் உறுதிமொழி

சுவடியியலும் பதிப்பியலும் என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறைக்கு அளிக்கப்பெறும் **நஞ்ச ராசன் கதை** என்னும் தலைப்பிலான இப்பதிப்பேடு எனது சொந்த முயற்சியில் உருவானது என்றும் இது இதற்கு முன்பு வேறு எந்தப் பட்டயத்திற்கும் அளிக்கப் பெறவில்லை என்றும் உறுதி அளிக்கிறேன்.

நாள் :
இடம் : சென்னை -5

(மு. அம்பாள்)
பதிப்பாளர்

# உள்ளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| பதிப்புரை | 11 |
| நன்றியுரை | 17 |
| கதை தொடக்கம் | 19 |

# பதிப்புரை

சென்னைப் பல்கலைக்கழகத்தில் உள்ள கீழ்த்திசைச் சுவடி நூலகத்திலிருந்து சுவடி (எண். R. 7404) **நஞ்ச ராசன் கதை** என்பது நான் பதிப்பிக்க எடுத்துக்கொண்ட நூல்.

**நஞ்ச ராஜ்ய சோபூஷணம்** என்னும் வடமொழி நூலில் நூலின் மொழிபெயர்ப்பு இதில் இரண்டு உல்லாச மட்டும் உள்ளன. ஏனையவை இல்லை. இதைச் செய்தவர் நரசிங்கக் **கவி**. இந்நூலில் **அலங்கார சாத்திரம்** பற்றி பேசப்படுகிறது. அலங்கார சாத்திரத்தை உரைநடையாக அமைத்துள்ளார்.

இக்கதையில் நஞ்ச ராசாவின் கதாயுதத்தின் சிறப்பையும் சத்துரு ராசாக்களின் பாதி தேசத்தை வென்ற நஞ்ச ராசாவின் வலிமையையும் அலங்காரம் செய்கிற சிறப்பும் குண அலங்காரத்தின் சிறப்புகளையும் கூறும் காவியம்.

**போதனை**

நஞ்ச ராசாவுக்கு சிவ பக்தியைப் போதித்து சொன்னவை. அப்போதனைகளை மூன்று விதமாகக் கூறுகின்றன. அவை,

(i) காவியம்

(ii) அர்த்தம்

(iii) சத்தம்

இவற்றைப் பற்றி இக்கதையில் விரிவாகக் கூறப்படுகின்றன.

நஞ்ச ராசாவின் செயம் கொண்டாடப்பட்ட கதையை கவிதையில் வல்லமை பொருந்திய நரசிங்கக் கவிகளால் பண்ணப்பட்ட “நஞ்சராசாயசோ பூஷணத்திலே” அலங்கார சாத்திரத்திலே நாயகனுடைய குணத்தைக் கூறப்படுகிறது.

அவனுடைய “களுல” என்ற குலத்தின் சிறப்பையும் அவனுடைய உல்லாசம் பற்றியும் பெண்களின் தன்மைகளைப் பற்றியும் கூறுகிறார்.

## இதில் கூறப்படும் தேசங்கள்

* அங்க தேசம்
* கலிங்க தேசம்
* கூண தேசம்
* குருர தேசம்

இந்த தேசங்கள் ராச்சிய பாரம் செய்கின்ற ராஜாக்களுடைய தேசங்களைப் பற்றிக் கூறுகிறது.

## இதில் கூறப்படும் படைகள்

* தேர்
* குதிரை
* யானை
* சேவர்

போன்ற படைகளின் சிறப்பைக் கூறுகிறது.

இதில் ஒரு மன்னனைப் பற்றியும், அவன் மீது அந்நாட்டுப் பெண்கள் கொள்ளும் காதலைப் பற்றியும் எழுதப்பட்டுள்ளது. இது "உலா" வடிவத்தைக் கொண்டு உரைநடை வடிவமாக எழுதப்பட்ட காவியம்.

## எழுத்துக்கள்

இப்பதிப்பிற்கு எடுத்துக் கொண்ட சுவடியில் எழுதப் பெற்றுள்ள எழுத்துகளில் சில எழுத்துகள் கூட்டெழுத்துகளாக அமைந்துள்ளன. நூலில் பயின்று வரும் எழுத்துகளில் ல-ள, ர-ற மாற்றங்கள் உள்ளன. பொதுவாக, பிரதி செய்பவர்களுக்கு இத்தகைய மாற்றங்கள் ஏற்படுவது இயல்பு. மேற்கண்ட சில எழுத்து மாற்றங்கள் பற்றிய சில எடுத்துக்காட்டுகளைக் காணலாம்.

உ - ஒ

குடுத்து - கொடுத்து

எ - அ

கெர்வம் - கர்வம்

தெண்டம் - தண்டம்

செனங்கள் - சனங்கள்

தெரிசனம் - தரிசனம்

கெதை - கதை

அய் - ஐ

| | | |
|---|---|---|
| வய்த்து | - | வைத்து |
| கய்யிலே | - | கையிலே |

வ - இ

| | | |
|---|---|---|
| விருக்குது | - | இருக்குது |

ல - ள

| | | |
|---|---|---|
| மெள்ள | - | மெல்ல |
| களிங்கம் | - | கலிங்கம் |
| களை | - | கலை |

ய - எ

| | | |
|---|---|---|
| யெந்த | - | எந்த |
| யெப்படி | - | எப்படி |
| யென்றால் | - | என்றால் |
| யெனில் | - | எனில் |

ய - இ

| | | |
|---|---|---|
| யிப்படி | - | இப்படி |
| யிந்த | - | இந்த |
| யிருப்பார்கள் | - | இருப்பார்கள் |

ன - ந

| | | |
|---|---|---|
| னாங்கள் | - | நாங்கள் |
| னாலு | - | நாலு |
| னான் | - | நான் |

ர - ற

| | | |
|---|---|---|
| தெரிந்து | - | தெறிந்து |
| பிரதேசம் | - | பிறதேசம் |
| சற்ப்பம் | - | சர்ப்பம் |

எழுத்து மிகுதல்

| | | |
|---|---|---|
| வந்தேன்னென்று | - | வந்தேனென்று |
| பெண்ஞ்சாதி | - | பெண்சாதி |

ெ - ே

| | | |
|---|---|---|
| வேறெ | - | வேறே |
| மனசிலே | - | மனசிலே |

இவ்வாறான எழுத்து மாற்றங்கள் பிரதி செய்பவரின் மொழி நடையை அறிந்து கொள்ளப் பயன்படுகின்றமை காணலாம். இப்பதிப்பில் பேச்சு வழக்குச் சொற்கள் அவ்வாறே கையாளப் பெற்றுள்ளன. சீர்திருத்த எழுத்து முறை பின்பற்றப்பட்டுள்ளது.

# நன்றியுரை

சுவடியியலை பட்டயப் படிப்பாக வைத்துள்ள சென்னைப் பல்கலைக்கழகத்திற்கும், முதுகலையில் சுவடி பற்றிய புரிதலையும் மாணவர்கள் பெற வேண்டும் என்று மாணவர்களை ஊக்கப்படுத்தும் தமிழிலக்கியத்துறைத் தலைவரும் எனது சுவடியைப் பதிப்பிக்க அனைத்து நிலைகளிலும் நெறியாள்கை செய்தவருமான பேராசிரியர் **வீ. அரசு** அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வகுப்பு எடுத்த பேராசிரியர் ய. மணிகண்டன், விரிவுரையாளர் இளங்கோ, லதா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கீழ்த்திசை சுவடி நூலகத்தார்க்கும் சுவடியைத் தேர்ந்தெடுக்க உதவிய ஐய்யனார் அவர்களுக்கும் என் நன்றி.

கணிப்பொறி அச்சு செய்து இப்பதிப்பேட்டை வடிவமைத்துக் கொடுத்த **இரா. மோகனலட்சுமி** அவர்களுக்கும் என் நன்றி. என் குடும்பத்தார்க்கும் என் தோழிகளுக்கும் என் நன்றி!!!

# நஞ்சராசன் கதை

வாரீர் நஞ்சமகா ராசாவே என்னைப் போலத்த சனங்களிடத்திலே உமக்கு இன்ப பிரவேசமானது எங்கேயிருக்கிறது. என்னிடத்திலே உம்முடைய மனது எப்படியோ அப்படியே எனக்கும் இருக்கும்.

இப்படி சிறிது வார்த்தைகளைப் பேசிக் கொண்டு அனேக அபராதத்தையெல்லாம் போகத் தக்கதை செய்தீர் என்று சொல்லி மறைவாயிருக்கப் பட்டயிட்டமான வார்த்தையை சொல்லுகிறான். நீ நாயகனிடத்திலே பிரத்தியட்சமாக அபராதத்தை பண்ணுகிறாய். பார்க்கச்சே எப்படி செய்யலாமோ இந்தப் பிரகாரம் சொல்ல நின்ற அந்த ராசாவினுடைய சரீரத்தைப் பார்த்து மிகவும் ஆதரவுடனே கூடினவளாக ராச்சியலட்சுமியுடனேயும் அநேக கலைகளுடனேயும் பழகியிருக்கப்பட்டவரே. புசபல பராக்கிரமத்தையுடைத் தாயிருக்கிறவனே நீர் பொறுத்துக் கொள்ள வேணுமென்று இந்தப் பிரகாரமாக ரொம்பவும் நல்ல வார்த்தை சொல் பிரீதியினாலே நானாவிதமாயிருக்கப்பட்ட விளையாட்டுகளினாலே எனக்கு மனது ஆச்சரியமாக இருக்குது.

வாரீர்! நஞ்சராசாவே இந்தப் பெண்களுடைய விளையாட்டிலே உபத்திரவமாயிருக்குறம். விதூஷகன் சொல்லுகிறான் நின்றிருக்கின்ற இந்தக் கத்தியானது சத்துரு ராசாக்களுக்கு பாதி தேசத்தை போக்கடித்து அப்பிரசித்தமாயிருந்தும் உன்னுடைய கதாயுதமானது அனேக கப்பங்களை கொண்டு வரத்தக்கதாகப் பண்ணுகிறது.

இதனாலே நஞ்ச ராசாவினுடைய கத்தி கதைகளுக்கு எதிரான ஆயுதத்தை எடுக்கிறது. சத்துரு ராசாக்களில்லாத படியினாலே இதுகளே மெத்தவும் பிரகாசமாச்சுது. இன்னமனேகமுண்டு. எட்டுவித வேடிக்கைப் பெண்களுண்டு. அவருடைய பெயரானது சொல்லப்படுகிறது.

இதுவன்னில் சுவாதீன பதிகர் என்றும் ஆவாச கசிகை என்றும் விர கோதண்டிகையென்றும் விப்லபத்தையென்றும்கண்டிதையென்றும்கலகாந்திரிதை யென்றும் புருரோஷதபறுத்திறுகை யென்றும் பிசாரிகை யென்றும் அடைவாக இவர்களுடைய லட்சணத்தை சொல்லுகின்றேன். அவளுடைய புருஷன் அவளை விட்டு நீங்குகிறதில்லை. வாசக கச்சிகையென்கிறவள் நாயகன் வருகிறபோது தன்னுடைய வீட்டை அலங்காரமாகப் பண்ணிக் கொண்டிருப்பாள். விரகோ தண்டிகை யென்கிறவள் நாயகனிடத்திலே வெகுகாலம் மிகவும் ஆசையுடைத்தாயிருப்பாள்.

விபறலதையென்கிறவள் நாயகனுடனே சனமில்லாத ஒருயிடத்திலிருக்க வேணுமென்று ஆசையுடைத்தாயிருக்கிறவள். கண்டிதையென்கிறவள் வேறு நாயகனுடனே கூடி விளையாடுகிறதை நிந்திக்கப்பட்டவள் கலகாந்திருதை யென்கிறவள் சனமில்லா மிடத்திலே வேறே ஒரு புருஷனுடனே கூடிவிளையாடுகிறதிலே ஆசை. இவளுக்கு அவுசாரியென்று பெயர்.

புரோஷிதபறுத்திருகையென்கிறவள் புருஷனானவன் தன்னுடைய தேசத்தை விட்டு பரதேசத்துக்கு போயிருந்தானே யாகில. அவன் வருகிற வரைக்கும் மெத்த மனசிலே விசனத்தை யுடைத்தாயிருப்பாள்.

கலகந்திருதை யென்கிறவள் திரும்பவும் வேறு ஒரு புருஷன் எப்போ வருவான் என்று வழி பார்க்கிறவள். இன்னமுதலிலேயிருந்து சொல்லி வருகிறேன். வாராய் தோழியே அனேகமாயும் பதுசாயும் இருக்கிற வார்த்தை என்ன பிரயோசனம். உன்னாலே எந்நேரம் எவ்வளவு காலம் போக்கடிக்க வேணும். ஆன படியினாலே பெரிய தெய்வமான படியிருக்கிற வேண்டிக் கொள்வேன். அப்போதானே என்னை மனசிலே நினைத்துக் கொண்டு வந்து விடுவார். பின்னையுமிப்போது உன்னுடைய வசமாய்ப் போய் விடுவாரென்கிறதாக நினைக்கிறேன். வாசகச்சிகையினுடைய லட்சணம் எப்படி எனில் ரத்னமயமாயிருக்கிற கண்ணாடியிலே முகமாகிற

தாமரைப் பூப்போல முகத்தைப் பார்த்து நெற்றி யினுடைய மத்தியிலே யிருக்கிற பொட்டையும் பார்த்து கன்னத்திலே யிருக்கிற மகர பத்திரிகை யாயிருக்கிற சந்தனக் கொட்டையும் பார்த்து பிரகாசியா மிண்ணிருக்கிற அனேக அபரணத்தினாலே சரீரத்தை அலங்கரித்துக் கொண்டு மகாபிரபலனாயிருக்கிற நஞ்ச ராசா வருகிற வழியைப் பார்த்துக் கொண்டிருப்பாள்.

இன்னம் எப்படியிருப்பாளென்னில் இளப கஸ்தூரி முதலானது களினாலேயும் சப்ர கூட மஞ்சத்தினாலேயும் அலங்காரம் பண்ணியிருக்கிற படுக்கை வீட்டிலே போய் அனேகமான தோழி சனங்களுடனே விளையாட்டாகப் பேசிக் கொண்டிருப்பாள். நஞ்சராசாவானவன் தன்னுடைய சமீபத்துக்கு வந்து விட்டானேயானால் இந்த நாயகியானவள் தன்னுடைய மனசிலேயிருக்கிற பீரீதியை கடைக்கண்ணாலே காட்டுவாள். வீரகோதண்டிகை யினுடைய சரித்திரம் எப்படி எனில் சொல்லுகிறான்.

ஆச்சரியம் புதுசாய் அப்போ பூத்த பூக்களினாலேயும் ரவைசல்லாக்களிலேயும் செய்திருக்கிற படுக்கை வீட்டில் ஏகாந்தமாக பேசுகிற சமயத்திலே ஒருத்தரிடத்திலே வார்த்தை சொல்லுகிறது சந்தோசமில்லை. இதுகள் அல்லாமல் சினேகிதம் பெண்களுடனே பேசுகிறதிலேயும் ஆசையில்லை.

தனக்கெதிராக போகிற சனங்களிடத் திலேயும், மனது பிரவேசியாது. இன்னாரின்னா ரென்கிறதும் தெரியாது.

நஞ்ச ராசாவானவர் வன வேட்டைக்குப் போயிருக்கிற போது, இந்தப் பிரகாரமாயிருக்கும் இவளுக்கு மனது விப்ரலதை யினுடைய சரித்திரம் எப்படியெனில் புதுசு புதுசாயிருக்கிற பீரீதி யினுடைய பேதத்தினாலே புருஷனானவன் என்னை சந்தோஷம் செய்து இவன் இன்னயிடத்திலே நீ வந்தியானால் நானும் வருகிறேன். ஒரு இடத்தையும் சொல்லிப் போட்டு வேறு ஒரு இடத்தில் ஆசையை வைத்துக் கொண்டு மிகவுமாச்சரியமாயிருக்கிறது. இஷ்டமான தோழிப் பெண்ணாயிருக்கிற இவளை சீக்கிரமாய் வா என்கிறதாய் சொல்லுகிறாள். இப்படியிருக்கிற குணம் எங்கே யிருந்து வந்தது என்று வாக்குவாதம் பண்ணுகிறவன்.

கண்டிதினுடைய லட்சணம் எப்படியெனில் சும்மா வஞ்சனையாக மிகவும் சந்தோஷம் செய்து வைக்கக் கூறினான். நறஞ்சினெண்ணாக இருக்குது வாரீர். நஞ்ச ராசாவே உம்முடைய அப்படிப்பட்ட நல்ல வார்த்தையெல்லாமறிவேன். ஏன் வந்துவிட்டீர்? இப்போ தானே நீர் இன்னுமொருதரம் வருகிறபோது அப்பாலே போயிருப்பேன். அப்போது நீர் தேட வேணும். இரண்டு பேருக்கும் சந்தர்ப்பம் அகப்படாது என்றது.

கலகப் பிரியினுடைய லட்சணம் எப்படியெனில் கோபத்தை விட்டுவிடு. மகத்து சாலியாயிருக்கப்பட்ட நஞ்ச ராசாவாகிற பூமி தேவேந்திரனைப் போய்ச் சேருவாராய். தோழிப் பெண்ணே இப்படிப் பட்டிருக்கிற பொசிபை விட்டு விடு.

இந்தப் பிரகாரம் சகியினுடைய வார்த்தையை அநாதரவுடனே கேட்டு பின்னையோ எண்ணால் சித்திரத்திலே எழுதியிருக்கப்பட்ட அந்த ராசாவை இமை கொடாமல் படிக்கு மெத்தப் பார்க்குறயே அவன் சித்திரமான படியினாலே உனக்கு அதராசத்தைக் கொடுப்பானா. உன்னைத் தழுவி கட்டிக் கொள்வானா என்றது. ஆனபடியினாலே அந்த நஞ்ச ராசாவைப் போய்ச் சேரு.

புரோஷித பறத்துறுகையினுடைய லட்சணம் எப்படியெனில் காசு மீரம். அங்கதேசம், கலிங்க தேசம், கூணதேசம், குகுர தேசம். இந்த தேசங்களை ராச்சியபாரம் செய்யா நின்ற ராசாக்களினுடைய கீரிடங்களானதுகள் அனேக காலம் நஞ்சராசாவைப் பார்க்கிறதற்கு காத்திருக்கிறார்களே. ஒருத்தரொருத்தர் காணுகிறார்களே. அப்படிபோலே அந்த ராசாக்களுடைய பெண் சாதிகள் நினைக்கிறார்கள். எப்படியென்றால் நமக்கு இந்த ராசாக்களைப் போலே என்றைக்கு ஏகாந்தமாக சமையம் கிடைக்குமென்று இதுவே மனசிலே நோவாக கெட்டியாய் வைத்துக் கொண்டு அவதிப்படுகிறார்கள் என்கிறதை கேட்டு பொருமைப் -படுகிறவள் இதிலே நஞ்சராசாவுக்கும் பர

ராசாவினுடைய பெண்சாதிகளுக்கும் பூசைப்பட வேண்டிய சம்பந்தம் எப்படியென்றால் நஞ்ச ராசாவை தரிசனம் பண்ணுகிறதுக்கு வந்த அந்திலிப்பிப்போன அந்த ராசாக்கள் சொல்ல அவரவர்களுடைய பெண்சாதிகள் முதலாயிருக்கப்பட்ட பேர்களுக்கு ஆசைக்கு சம்மந்தம்.

அவுசாரியினுடைய லட் சணம் எப்படியென்றால் யுத்தமுகமாகிற ராத்திரியிலே தூளியாகிற இருட்டு மூடினது மையத்திலே அனேகம் யானைகளாகிற மேகங்களினாலே இருட்டு மிகுந்திருந்த போது நஞ்சராசாவினுடைய கையிலே ஆடா நின்ற கத்தியானது வெகுரத கசபதாதிகளை தொரத்தி -யடித்து சங்காரம் பண்ணினபடியினாலே அது மூலமாக வந்து நஞ்சராசாவை தனக்கு மனதுக்குச் சம்மதியானபடி கட்டித்தழுவிக் கொள்ளுகின்றான்.

இதனாலே நஞ்சராசாவினுடைய சத்துருக்களை சங்கரித்ததினாலே வந்த வீரலட்சுமியிருக்கும் அவுசாரியென்கிற நாமகரணம் இந்த எட்டு விதமாயிருக்கப்பட்ட அலங்காரப் பெண்களுக்கும் நாயகனாகிய நஞ்சராசாவுக்கும் கூட்டி வைக்கிற பெண்களை பெயர் சொல்லப்படுகிறது. அந்தப் பெயரெதுவென்றால் தூதி என்றும், தாசி, சகி, தாத்ரேயி என்றும், பிருதிவே சிணி, லிங்கிணி, சிலப்பனி, சுவாசா என்றும் சகாயப் பெண்கள் பெயர். இவர்களுடைய லட்சணம் பிரசித்தமாயிருக்கிறது.

சூட்சும பெண்கள் மூணுபெயர். முத்தமை, மத்திமை, பிருகலப்பை யென்றும் புதுசாய் இருக்கிற யௌவன வயசுயுடைத்தாயிருக்கிற முத்தை யென்கிற பெண் வெட்கத்தினாலே மனம் தனை செயம் பண்ணினவள்.

நடுப்பிரயாமாயிருக்கப்பட்ட மத்திமை யென்கிற பெண் மனசு தன்னிடத்திலேயிருக்கத் தக்கதாக செய்கிறவள். யௌவனமெல்லா முடிந்து போன வயசையுடைத் தாயிருக்கிற பிருகல்பை யென்கிற பெண் அடங்கிப் போன மன்மத விகாரத்தையுடைத்தானது.

இதிலே முத்தையினுடைய லட்சணம் எப்படியெனில் வாரீர் நஞ்சராசாவே உமக்கு மனதானது அவள் பேரிலே ஆசையிருந்தால் பீரிதியினுடைய வெட்கத்தினாலே அவள் மிகுந்திருக்கிறாள். அந்த வெட்கமானது அந்த ஆசையை மறைக்குது. அப்படியிருந்தாலும் நான் போய் கேட்ட இடத்தில் முகத்தை வணங்கிக் கொண்டிருந்தாள். ஆன படியினாலே உனக்கு அவளுடனே சந்தியானது சீக்கிரமாக எப்படி ஆய்விடும் என்றது முத்தையினுடைய லட்சணம்.

மத்திமையின் உடைய லட்சணம் எப்படியெனில் வாரீர் நஞ்சமகாராசாவே! வெகு சாமர்த்தியமாக புருசனாகப் பண்ணிக் கொள்கிறாள். ஆன படியினாலே மெல்ல மெல்ல வார்த்தைகளினாலே தோணப்படுகிறது.

கண்களுக்கு அநேக விளையாட்டுகளும் தோணப் -படுகிறது. மந்தகாசம் பண்ணுகிறதினாலேயும் புருஷனிடத்திலாசை யினாலேயும் அவளுடைய கன்னத்திலே (ஏரேதச்சந்தன) (அச்சந்) தோணுகிற படியினாலேயும் இந்தப் பெண்ணானவள் உம்மாலே சாமத்தியமாக அனுபவிக்கலாம் என்று மத்திமை -யினுடைய லட்சணம்.

பிருகல்பையினுடைய லட்சணம் எப்படி யென்றால் கொஞ்சம் பிரீதியினாலே வந்திருக்கின்ற மனசினாலே தெரியப்படுகிறது. அனேக சிருங்கார ரசத்தோடே கூடியிருக்கிற கடைக்கண் பார்வை யினாலே மன்மதனை யுண்டுபண்ணுகிறாள். நஞ்சராசாவே உம்மை இந்த உலகத்துக்கு ஒரு பொட்டுப் போலே பார்க்கிறார்கள் என்று இவர்களுடைய லட்சணம். இப்படி அநேகப் பெண்கள் நஞ்ச ராசாவிடத்திலே ஆசைப்படுகிறது என்று அறிந்து கொள்ளலாம். குண அரவலங்காரங்கள் சமானங்கள்.

அலங்காரம் செய்கிறதிலே இருக்கிற சிறப்பு எதுக்கோ அது அலங்காரத்துக்கு அது அலங்காரத்துக்கு இருப்பிடம் என்று வித்துவாங்க சரக்களாலே சொல்லப்படுகிறது. அந்தக் குண அலங்காரத்துக்கு இருப்பிடம் காவியம்.

பிரபந்தம் ஆனபடியினாலே அதுக்கு அலங்கார மென்று சொல்லப்பட்டது. ஒரு விடத்திலாசமே

மிகுந்திருக்கும். ஒரு விடத்திலங்காரமே மிகுந்திருக்கும். ஒரு விடத்தில் பொருளே மிகுந்திருக்கும். இதிலொசப் பிரான்னியம் ரசமிகுந்திருக்கும். எப்படி யெனில் சொல்லி வருகிறார். மிருகாத்தியா மானைப் போல மருண்ட பார்வையுடைத்தான பெண்ணுடைய முகமோ தாமரை மொகுளம் பூ. கன்னங்களோ கண்ணாடிக்கு சகமாயிருக்குதுகள் கண் பார்வையோ அனேகம் விளையாட்டை செய்கிறதுகள். சரீரமோ பொன்னாலே செய்த கொடிபோலே இருக்குது. வாரீர் நஞ்சராசாவே. அழகோ என்றால் உம்முடைய அழகுக்கு சமமான மாயிருக்கும். இது நஞ்ச ராசாவைப் பார்த்து தோழியானவள் சொல்லுகிறாள்.

இதிலே ரசமெங்கே யிருக்கிறதுவென்றால் அழகு சொன்ன மகிமையினாலே ஒரு ஆசை தோணுகிறது. சிருங்கார ரசம் ரொம்பவும் தோத்துகிறது. அலங்கார மிகுந்த எப்படி என்றால், இந்த உலகத்திலே நஞ்சராசாவினுடைய கீர்த்தியானது. சர்வகாலமும் ரொம்பியிருக்கிறபோது, கோர பட்சி களானதுகள் சந்தோஷத்துடனே அதிக ஆனந்தத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறதுகள்.

இதிலே நஞ்சராசாவினுடைய கிறுத்திக் கூட்டத்திலே சந்திரனென்கிற மயக்கம் இது பிறந்திமத்துல அலங்காரம் வத்து மிகுந்து எப்படியென்னில் திரிபுரசங்காரம் பண்ணின ஈஸ்வரனுடைய மனதுக்கு ஆனந்தத்தைப் பண்ணா

நின்ற நஞ்சபூபாலராசசந்திரனானவன். அனேக பணத்தைக் கொடுத்து தானம் பண்ணுகின்றதற்கு ஆரம்பித்திருந்தபோது வாராய் மன்மதா மகாமேரு பருவதத்திலிருக்கின்ற மலையருவியென்கிற கவடத்தினாலே கண் சலத்தை விடுகிறது. ஆன படியினாலே ஆனதினாலே அதிலேயிருக்கின்ற தேவப் பெண்களை சயம் பண்ணுகிறதற்கிது சமயம்.

இதிலே நஞ்சராசாவுக்கு சிவபத்தியும் உதாரமும் சொன்ன படியினாலே வஸக பிராதானியம். அதுகள் காவியம் அர்த்தம் சத்தம் என்கிற பேதத்தினாலே மூன்று விதம். இதிலே முந்தினதாயிருக்கிற காவியமெப்படியெனில் கத்தியுடனே கத்திச் சண்டை ஆரம்பித்த யுத்த சமயத்திலே மகாபலசாலிகளாய் ஆராளான பேர்கள் அடிக்கிற பேரியினுடைய சத்தங்களைக் கேட்டு ஓடி வாரா. நின்றிருக்கிற யுத்த சூராளான் பேர்கள். அனேக சந்தோஷத்தோடே போகிற போது செயத்தம்பங்கொண்டு கூடப் போகிறபோது, அதிலே காத்தடிக்குமிடத்து அதனாலே டக்காரா சத்தத்தைக் கேட்ட மாத்திரமே பரதேசத்து ராசாக்களெல்லாம் மிகவும் பயந்து இந்த நஞ்சமகாராசாவினுடைய பாதத்திலே தங்களுடைய கிரீடத்தை வைத்துக் கொண்டு பாதாக்கிரந்தாரை யிருக்கின்றாள்.

அர்த்த லட்சணம் எப்படியென்றால் சரத காலத்திலே யுத்தசமயத்திலே நஞ்சராசா வானவன். யுத்தத்துக்கு போகிறபோது மகா செயசீலமாயிருக்கிற

கொடியினுடைய சண்டாவினாரே ஆடா நின்றிருக்கிற குரங்கைப் பார்த்து புதுசா ருதுவாயிருக்கிற பெண்கள் தங்களுடைய பேச்சினாலே சூரியன் போலேயிருக்கிற முகத்துக்கு தாமாச பூப்போலேயிருக்கிற கண்களி னாலே அனேக சந்தோஷத்தைப் பண்ணுகிறாள். இதுனாலே புதுசா ருதுவான பெண்களுடைய ஆலாபத்தினாலே அனுமக்கொடி வர்ணிச்சப் படியினாலே சத்தாரதபிரகாசமெப்படி என்னில் யுத்தத்திலே எத்தினமா யிருக்கிற நஞ்சராசா வினுடைய கையிலே ஆடா நின்ற கத்தியினுடைய தெரிகிற முனைகளினாலே வெட்டப்பட்ட தலைகளி னாலே சத்துருக்களுடைய பட்டணங் களெல்லாம் நிறைஞ்சது. இந்த சமயத்திலே சிறிது பேர்கள் சீக்கிரமாக ஓடி வந்து சேவிக்கிறார்கள். சமத்த யௌவனப் பெண்கள் ஆன பேர்களெல்லாம். இந்த நஞ்ச ராசாவை வந்து அடைந்தார்கள்.

இந்தப் பிரகாரமாக நான் சொன்னேன் அது. அனேக வித்துவாம் சரக்கிளுக்கு சம்மதிப்பட்டது. சிறிது பேர்கள் சத்துரு ராசாக்களுடைய சவுரியாதி களைச் சொல்லி அவாளுடைய செயம் இவனுக்கு கிடைத்தபடியினாலே நாயகனுக்கு சிரேஸ்டம் என்று சொல்லுகிறாள். அதை நானும் சொல்லுகிறேன்.

சத்துரு ராசாக்களுடைய பெண்சாதிகளுடைய கற்பமானது யாதொரு நஞ்ச மகா ராசாவை நினைத்த போதிலே சீக்கிரமாக கலைந்து போகிறது. நஞ்சராசா

வினுடைய அழகைக் கேட்ட மாத்திரத்தில் மன்மதனும் விசாரப்பட்டுக் கொண்டிருப்பான். இந்த ராசாவானவன் ஏழை மனுஷருக்கிரங்கி கொடுக்கிறதைக் கேட்ட மாத்திரமே கர்ணனும் நாணிப் போனான். தோஷமில்லாம லிருக்கிறகளால் குலத்திலோஞ்ச ராசாவானவன் பிறந்ததைக் கேட்ட மாத்திரத்திலே சந்திரனானவன் தான் திருப்பாக் கடலிற் பிறந்திருக்கிறதை நிந்திக்கிறான்.

இந்தப்படி அனேக குணசாலியாயிருக்கிற உம்மை யார் தோத்திரம் செய்வார். பிரம தேவரானவர் தன்னுடைய பிள்ளையாயிருக்கிற நாரதரைப் பார்க்கிறதற்கு ஆசையில்லாமல் போய் லட்சுமி காந்தனாயிருக்கிற மாவித பெருமாளும் இந்தப் பூமியிலே வந்து இஷ்ட பெண்களை வைத்துக் கொண்டு சிறிதுகாலமிருந்தார். இப்படி ஒரு தேவதைகள் முதலான பேருக்கெல்லாம் ஒரு குற்றமுண்டு. இவனுக்கொரு குற்றமுமில்லை. பின்னையும் சொன்ன யென்ன சமத்த லோகத்திலேயுமிவனுக்கு சமமான ஆராள் கிடையாது. மதத்துவ சாலியாயிருக்கப்பட்ட நஞ்ச மகாராசாவுக்கு சொன்னபடி கேட்டுக் கொண்டு மன்மதன் திரிகிறான். இவனுடைய தைரியத்தை கேழ்க்குமிடத்து, அப்பிரயோசனம் முதல் . . . . . . இதுவரைக்கும் நாயகனா யிருக்கிற நஞ்ச ராசாவினுடைய அதிசயம் தைரியம் கொடுக்கிறது. இதுகளைச் சொல்லி வந்தேன். இது பரமசிவனுக்குயுடைத்தாயிருக்கிற

சரீரமாக அவதரித்தி ருக்கிற சிவராம குருவினுடைய பாதார விந்தத்திலே தண்டம் பண்ணினதினாலே வந்திருக்கிற ஒருத்தர் சகாயமில்லாமல் தைந்திக்குப் பிரமபெந்தம் பண்ணினதினாலே சந்தோஷப்பட்டிருக்கிற சமத்தமானக ராசாக்களினாலே இவனைப் போலொத்த பலமில்லாத படியினாலே கண்ணிலே காணாமல் ஓடி மறைந்து போகிறார்கள்.

விபரோபலெட்சணம் எப்படியென்றால் நஞ்சராசாவன் யுத்தப் பிரவேசத்துக்கு போன சமயத்திலே தேர், யானை, குதிரை, சேவர் இவர்கள். பூமியிலே நடந்து போறதினாலே யுண்டாயிருக்கிற தூள்கள் சூரிய மண்டல மட்டுக்கு முலாவிப் போய்விடும் போது அதெப்படியிருக்குமென்றால் இந்த நஞ்ச மகாராசாவினுடைய சரீரகாந்தியினாலே வெட்கப்பட்டு தாமரைப் பூவுக்கு சந்தோஷம் செய்கிற சூரியன் ஒரு திரைப் போட்டு மறைச்சாப் போலே இருக்குறது.

நஞ்ச மகாராசாவினுடைய கைகளாகிற கொம்பு அதிலே கத்தியாகிற நுனிக்கொம்பு. அதிலே ஒழுகுகிற ரத்தத்துளியாகிற பூ. இந்தப் பிரகாரமாக சயம் பண்ணினதினாலே வந்திருக்கிற கீர்த்தியினுடைய கூட்டத்தினாலே வந்த அனேக வீரலட்சுமி, செயலட்சுமி, தனலட்சுமி மிகவும் ஐசுவரியத்தைப் பொருந்தியிருக்கிறான். அவன் மகாபிரசித்தமா யிருக்கிற நல்ல குலத்திலே பிறந்து இந்தப் பூமண்டலத்திலே அதிபலத்தை யுடைமடைந்தவனா

யிருந்து ராச்சியம் செலுத்தி அனேக சந்தோஷத்தை அடைந்து வெகுதர்மங்களைப் பண்ணி, இந்தப் பூலோகத்துள்ளே அந்த நஞ்சர்,

அர்ச்சுனனைப் போலே அவன் ஒருத்தனே அனுமக்கொடின யுடைத்தாயிருக்கிற நஞ்ச ராசாவினுடைய பத்து திக்கு முகத்தையுடைத் தாயிருக்கிற பூமியினுடைய மண்டலத்தைப் பார்த்து சத்துரு ராசாக்கள் அனைவரும் எங்கே போய் சேரலாமென்று அலைகிற போது ராசராசனாயிருக்கிற நஞ்ச ராசா திக்குகளைச் செயம் கொண்டாடப் பட்டயசமாயிருக்கிற கவிதையிலே வல்லமை பொருந்திய நரசிங்கக் கவியினாலே பண்ணப்பட்ட நஞ்ச ராசா யசோ பூஷணத்திலே அலங்கார சாத்திரத்திலே நாயகனுடைய குணத்தைக் காண்பிச்சுது. முந்தின உல்லாசம் விட்ட விடத்திலே கொஞ்சமலங்காரம் சொல்லுது.

இதுக்கப்பால் ஒண்ணுரெண்டு வீதம் நீடி முன்னிடுதல் என்றும் போக முன்னிடுதலென்றும் இதிலே ரூப முன்னிடுதல் என்றும் சொல்லுவது எப்படியெனில் பூச்சியமாயிருக்கிற சூரூல குலத்திலே பிறந்து உலகத்துக்கு சந்தோஷத்தையுண்டு பண்ணிக் கொண்டு நஞ்ச ராசாவானவர் சகல சத்துரு ராசாக்களுடைய தலையிலேயிருக்கிற கிரீடமெல்லாம் இவனுடைய பாதத்திலே பளீர் பளீரென்று மின்னுது.

இதெல்லாம் நீடியாக முன்னிறப எப்படியெனில் நஞ்ச பூபால மகா ராசாவானவன் புசப்பலத்திலே ஒரு விளையாட்டுப் போலே இந்த ராச்சியமெல்லா மாளுகிற போது பாம்புகளுக்கு ராசாவாயிருக்கிற ஆதிசேஷன் சுகமாக யோக போக்கியத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறான்.

களுல குலத்திலே பிறந்து ராசராசனாயிருக்கிற நஞ்ச ராசாவினுடைய கத்தியினுடைய முனையிலே அட்ட திக்குகளிலேயிருக்கிற ராசாக்களெல்லாம் செயிக்கப்பட்டு, நஞ்ச ராசாவினாலே போடப்பட்டும் கோபமாயிருக்கிற பெரியயீட்டியைப் பார்த்தும் சத்துருக்கள் அனைவரும் மிகவும் பயந்து ஓடி ஓடக்கண்ட விடங்களிலே மறைந்து போகிறார்கள். தங்களுக்குண்ணுகிறத்துக்கு பயணம் புறப்பட்ட மாத்திரத்திலே சத்துரு ராசாக்கள் அனைவரும் பயந்து சிங்கமானது குகை புகுகிறாப் போல மலையினுடைய குகைகளிலே பூந்து போனார்கள்.

திருவிக்கிறமாவ தாரத்திலே மகாவிஷ்ணுவானவர் எவ்வளவு கீர்த்தி சம்பாதித்தாரோ சுவர்க்கத்திலே தேவேந்திரணானவன் எப்படி கீர்த்தியை சம்பாதித்தானோ அப்படி போலே மகா கீர்த்தியை யுடைத்தாயிருக்கிறவன் சகல செனங்களாலும் கொண்டாடத் தக்கதாயிருக்கிற குணமே ஒரு சரீரமானது போலே இருக்கப்பட்டவன் ராச்சியத்திலே யிருக்கிற சனங்களுக்கு வெகு சுகத்தை கொடுக்கப்பட்டவன்.

களுல குலத்துக்கு ஒரு ரத்தினம் போலேயிருக்கப்பட்டவன். ராசாக்களுக்கு முதல் ராசாவாயிருக்கிற நஞ்ச ராசாவைப் பார்த்து புதுசாயிருக்கிற மன்மதனைப் போலே பார்த்து ஒரு உல்லாசமான சரீரத்தை யுடைத்தாயிருக்கிற பெண் மெத்தவும் மோகத்தை அடைந்து விசனப்படுகிறாள்.

இப்படியிருக்கிற நஞ்ச ராசாவானவன் கையிலே வில்லெடுத்துக் கொண்டு நாணிலே அம்பை வைத்து காது பரியந்தமிகுத்துவிட்ட அம்புகளினுடைய கூட்டங்களினாலே அறுக்கப்பட்டிருக்கிற சத்துரு ராசாக்களுடைய சேனையானது எப்படியிருக்கிறது என்றால், முறிச்ச சூரியனைப் போல யானையினாலே ஒழுகிற ரத்தமானது யாகிற இருட்டு அதிலே புறப்படுகிற ரத்தமே ஒரு சூரியனுதித்தது போலே ஆனையினுடைய இது ஸ்ரீ பரமசிவனுடைய அவதாரமாயிசல ரசவமாயிருக்கப்பட்ட சிவராமர் என்கிற குருவினுடைய பாதாரவிந்தத்தினுடைய சிடாட்ஷசித்தினாலே உண்டாயிருக்கிற பிரபாவத் தினாலே சம்பாதிக்கப்பட்டிருக்கிற அனுக்கிரகத்தை யுடைத்தாயிருக்கிற சகாயத்தை நந்தியினுடைய கவிதை உண்டு பண்ணுறத்துக்குச் சகாயமாயும் சமத்த வித்துவாங்கி சாளுலே கொண்டாடத் தக்கதாயிருக்கிற சத்தோடே கூடி விடுக்கிற கவிதையுடைய சமூகத்துக்கு எஜமானயிருக்கிற நரசிங்க வித்துவானாலே பண்ணப்பட்டிருக்கிறதிலே நஞ்ச ராசாவினுடைய கீர்த்தி அலங்காரத்திலே அந்த

சாதியினுடைய சட்டம் வேறு சாதியினுடைய கூட்டம் எப்படி தோல் வித்திரமானதும் அத்தியந் கம்பீரத்தினாலே வெண்ப்பாட்டா கத்திரிக்கப் படுகிறது.

தன்னுடைய மாமனுர கொடுக்கப்பட்ட தென்று உண்டாயிருக்கிறதுறகை யென்கிற பெண்ணானவள் பொரகுருள் நஞ்சராசாவினுடைய கீர்த்தியினாலே வியாபிக்கப்பட்டது. ஈசுவரனாலே தரிக்கப்பட்ட தாயிருக்கிற யானை ராசாவினுடைய சமர்த்தை இவ்விடத்திலே நஞ்ச ராசாவினுடைய கீர்த்தியினாலே வியாபித்திருக்கிற யானை ராசாவினுடைய சமர்த்தை சொன்னபடியினாலே தோற்றப்படுகிற தாயிருக்கிற வேறு ஒருவத்துவினுடைய இடத்திலே மறைந்த சுரூபம் மீலனம் மூடியிருக்கிறதுயென்கிறது அலங்காரத்தினாலே தோல் வித்திரத்தினாலே வெண்பட்டு என்கிற மயக்கம் மிகவும் சாதிக்கப்பட்டது என்று மீலன் மிகவும் பிருந்தியை யுடைத்தாயிருக்கிற அலங்காரங்களுக்கு வேறு சாதிகளுக்கு சங்கரம் கூட்டம்.

ஒரு வாசகத்தினாலே அனுப்பிர விட்டமாய் சொல்லப்பட்டிருக்கிற கூட்டமானது எப்படி உலகத்திலே விபவிறெண பிராணனாயிருக்கிற அகத்தியராலே விந்திய சைலத்தினுடைய தற்பம் கற்வமானது கீரீடா விளையாட்டிலேனூனம் போக்கடிக்கப்பட்டது. அதைக் கேட்டு ஒசந்திருக்கிற

ராசாக்களை சங்கரித்து சர்வ காலம் நஞ்ச ராசாவை ராசலட்சுமியானவள் சேவிக்கிறாள்.

அழகிலே மன்மதன் போலேயிருக்கிறவன் பெருமையிலே திருப்பாற்கடலைப் போலேயிருக் கிறவன். புசபலத்திலே ஆதிசேடன் போலே யிருக்கிறவன். கவிசனங்களிடத்திலே தேவ கல்பக தருவைப் போலேயிருக்கிறவன். வித்தையிலே தேவகுருவைப் போலே யிருக்கப் பட்டவன். அன்னிய மதத்தை கண்டிக்கிறதிலே சுக்கிராச்சாரியைப் போலே யிருக்கிறவன். மெத்தவுமிப்போ நஞ்ச ராசாவை விட எவன் தான் தண்ணியனோ தெரியாது. நஞ்ச ராசாவினுடைய பாளயமானதிலே சத்த நேர்த்தியிலே கொல்லப்பட்டிருக்கிற மதயானையினுடைய கொம்பிலே யிருந்து வெளியிலே தெரிச்சிக்கிற முத்துக்க ளானதுகள் பொன்மணி போலே இருக்குதுகள்.

அப்போதே தேவப் பெண்களானதுகள் நம்முடைய சென்மமெடுத்ததுக்கு இப்போ சமயமமாச்சுதென்று ஒருத்திக்கொருத்தி காதுகளிலே ரகசியமாய் சொல்லிக் கொள்ளுகிறாள். எதிராளி பாளயத்திலே விழுந்து நஞ்ச ராசாவினது வங்கிசம் பண்ணுகிற போது நஞ்சராசாவினுடைய டமாரத்தி னுடைய பாங்க ராசத்தினாலே கேட்டபோதிலே நழுகிப் போயிருக்கிற கெற்பத்தையுடைதாய் இருக்கிறார்கள்.

மகா செயசீலனாயிருக்கிற நஞ்சமகாராசா வினுடைய மேகம் போலே கருத்திருக்கிற கத்தியை சீக்கிரமாகப் போட்டு பிளக்கப்பட்டிருக்கிற யானைக் கூட்டத்தினுடைய மத்தகங்களிலேயிருந்து விழுகிற முத்துக்களைப் பார்க்கிற சத்துரு ராசாக்களுடைய சேவுகளாலே யுத்தமாகிற விளையாட்டினுடைய திருவிழாவினாலே வாயைத் திறந்து சிங்கப் பல்லைக் காட்டுகிற போது சிங்கங்களானதுகள் வாயைத் திறந்ததாலெப்படியோ அப்படி பார்த்த பேருக்கெல்லாம் தோணப்படுகிறது.

சாணைக் கல்லிலே தீட்டியிருக்கிற பத்துமார் கல்லினுடைய துணுக்குப் போலே காந்தியையுடைத் தாயிருக்கிறதுகள். மலர்ந்திருக்கிற பூரசம் பூபோலே பரம்பியிருக்கிற காந்தியையுடைத்தாயிருக்குதுகள். உதைய காலத்திலே மலரா நின்ற பெரிசாயும் சிரேஷ்டமாயுமிருக்கிற தாமரைப் பூவினுடைய கருவத்துக்கு முன்னடக்குறதுகளாயுமிருக்குதுகள்.

இந்த நஞ்ச மகாராசாவினுடைய கீர்த்தி சமூகத்தையுடையவானதுகள். இந்தப் பிரகாரமாக இந்தப் பிரகாரமாக உலகத்திலே பரம்பிக் கொண்டிருக்கிறது. அதற்குப் பிற்பாடு பரிபக்குவத் தினுடைய சொரூபமானது காண்பிக்கப் படுகிறது. அறத்தினுடைய பெருமையை பரிபக்குவம் அனுமதை பிரவேசித்து ரெண்டு விதமாயிருக்கும். தேங்காயினுடைய பக்குவம் பிரவேசமாக உள்ளே

ஆகுதென்றும் இதுக்கு திரட்ச பாகமென்றும் பெயர். வெளியிலே சமையல் புரையிலே நடக்கிற பாகம் ரசபாகம் என்றும் பேர்.

பெண்களான பேர்கள் லச்சையுடனேயும் ஆசையுடனேயும் ஏகாந்த விளையாட்டிலே மனசுக்குப் பொருந்தினவனானகவும் பீரிதியினாலே கொண்டாத்தக்கண்ணாகவும் சந்தோடத் திரவியங் கொடுக்கிறவனாகவும் மந்தகாசமாகிற சந்திரனாலே மலர்ந்திருக்கிற கையையுடைத்தாயிருக்கின்றான். மன்மதனைப் போலே சந்தோஷத்துடனே நூதனத் துடனே யிருக்கிற நஞ்ச ராசாவை சுகத்துடனே அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதுக்கு உபமானமெப்படியெனில் சோவையினாலே விளங்குகிற காந்தியினுடைய பரம்பரையிலே பிரகாசிக்கிற சரீரத்தையுடைத்தாயிருக்கிறார்கள்.

நஞ்ச இந்திர மகாராசாவைக் கடைக்கண்ணாலே பார்த்து இவனுடைய மோகத்திலே முழுகு கிறார்கள். மனோக்கியமாய் விளையாடு கிறார்கள். சத்துருகள் மனசை சந்தோஷம் பண்ணிக் கொள்கிறார்கள். உல்லாசம் பண்ணிக் கொள்ளுகிறார்கள். சிரிக்கிறார்கள்.

பெண்களான பேர்களிப்படி செய்கிறார்கள். அந்த தேங்காயினுடைய பாகத்தினுடைய மத்தியிலே மறைஞ்சு ரசமுன்டாயிருக்கிறது எப்படியென்றால் அதைச் சொல்லுகிறார். ஒரு பெண்ணுக்கு யௌவன

வயசு உண்டாகிற சிறப்பினாலே முன்னே சந்தோஷத்தைச் செய்து வையா நின்றிருக்கிற சரீத்திலே அடைந்திருக்கிற வேர்வை சலத்தினுடைய துணுக்களானதுகள் மன்மதன் தன்னிடத்திலே யிருக்கிற அழகைப் பண்ணுறதுகள்.

சவுந்திரிய லட்சுமியை தானே தரித்திருக் கிறார்கள். சந்தோஷத்தினாலே நாட்டியம் பண்ணிக் கொண்டிருக்கிற பெண்களிடத்திலே நஞ்ச ராசாவுக்கு சந்தோஷமானது. மனசை இவர்களுடைய காதுகளை முறங்கள் போலேயும், தும்பிக்கைகளை உலக்கை போலேயும், கால்களை போலேயும், உடல்களை மலைபோலேயும், பாணங்களைப் போட்டு அறுத்துத் தள்ளிப் போட்டான். இந்தப் பிரகாரமாச் செய்த நஞ்ச ராசாவானவர் பெருமையிலே திருப்பாற் கடலைப் போலே யிருக்கப்பட்டவன், பலத்திலே ஆதிசேஷன் போலேயிருக்கப்பட்டவன், தைரியத்திலே மகாமேரு போலேயிருக்கிறவன், வித்தையிலே தேவர் குருவைப் போலேயிருக்கிறவன், அன்னிய மதத்தைக் கண்டிக்கிறதிலே அசுரகுருவாகிய சுக்கிராச்சாரியைப் போலேயிருக்கிறவன், அழகிலே மன்மதன் போலே யிருக்கப்பட்டவன். யாசகத்துக்கு வருகிற கவிகளிடத்திலே கற்பக விருட்சம் போலேயிருக் கிறவன் ஆனபடியினாலே பூமியிலே இந்த ராசாவை விட ஐசுவரியத்தையுடைத்தானவன். எவனோ வாரீர். நஞ்ச ராசாவே உனக்கும் எனக்கும் இப்படியப்படி யிருக்கிற சபா ரஞ்சனத்தினாலே சந்தோஷம் பண்ணி

வைப்பான். சகல செனத்தையும் உன்னைப் போலே ரட்சிக்கிறவனில்லை. ஆதலால் உன்னுடைய சவுரியமென்ன ஆச்சரியம்.

நஞ்ச ராசாவினுடைய குதிரையினுடைய குளம்புகள் தடபுட என்று பூமியிலே அடிபடுகிற தினாலே அந்தப் பூமியிலேயிருந்து உண்டாயிருக்கிற தூளிப் படத்திலே மிகவும் பிரவேசிக்கப் பண்ணி வைத்து இதிலே முந்தின அர்த்தப் பிரகாசம் பாக பேதங்கள் கூட எப்படி உண்டாகிறதெண்ணு யோசிக்கத்திக்கிளதென்று சொல்லுகிறது.

தோத்திரத்துக்குப் பிரதானம் பிறுதானியங் களினாலே பிரகாசமாக மூவிதங் காவிய லட்சணம் தோத்திரத்தில் பிரதானமாயிருந்தால் அந்தக் காவியம் உத்தமம் அப்பிரதானமாக இருந்த குணமாக இருந்ததானால் வியங்கியமென்று சொல்லப்படுகிறது. திரும்பவும் எங்களைப் பார்க்கிறதற்கு வாரீர் நாயகனே. உனக்கு மனசு இருக்குமானால் இப்போ தானே ஒன்று கொடுக்கத்தக்கினது. பிரத்தியட்சமாக காணப்பட்ட என்போலே யொத்த சனம் இருவத்தோடே கூடியிருக்கிற மன்மதனைப் போலே அறி.

இந்தப் பிரகாரம் தங்கள் தங்கள் பெண்சாதி களினாலே சொல்லப்பட்ட வார்த்தையைக் கேட்டு அன்னிய தேசத்து ராசாக்கள் அனைவரும் முகத்தை

வணங்கிக் கொண்டு நஞ்சனாகிற இந்திரனைப் பார்க்கிறதற்கு எத்தினத்தை அடைந்தார்கள். தோத்திரத்தினுடைய பிரதானமே என்றால் அறத்தினாலே தோணுகிற படியினாலே சறத்திலே மிஞ்சியிருக்கிறது.

அது தவிர மற்றதுகளெல்லாம் அப்பிரதானம் அது தானே குணமாகிறது. எப்படி மானுடைய கண் போலேயிருக்கிற கண்ணை யுடைத்தாயிருக்கிற பெண்களிருப்பிலே கீரிடையானது எங்கே அதிகமாகத் தோணுதோ எவளிடத்திலே இவனுடைய மனசு தானே போய் சினேகிதம் பண்ணுகிறது. இந்தப் பிரகாரம் பெண்கள் இப்படி ஒருத்தருக்கொருத்தர் சொல்லிக் கொண்டு நஞ்ச ராசாவைப் பார்க்கிறார்கள். இது மூன்று விதமாயிருக்கும். அதிலே சத்தத்தினுடைய சித்திரமெப்படி என்றால் நஞ்ச ராசாவினுடைய சேனாதிபதிகள் சண்டையிலே கூடிக் கொண்டு வளைந்து வளைந்து கொண்டு எதிராளியினுடைய சேனையிலே மகாசிரமமாயிருக்கிற சிங்கம் போலே விழுந்து அவர்களுடைய சேவுகர்களையெல்லாம் கொன்று எமனுடைய பட்டணத்துக்கு அனுப்பி வைக்கிறான்.

சாம்பிராச்சிய லட்சுமியினுடயதுக்கு கூட உண்டாயிருக்கிற ஆசைக்கு மெத்தவும் பிரபலனா யிருக்கிறான். சண்டைக்கு ஒரு வீரனாயிருக்கிறான். மகத்துவ சாலியாயிருக்கிற நஞ்ச ராசாவை நாதன் தங்களுடைய கொ்வத்தை விட்டு கற்பக மரத்தை

தேவதைகள் எப்படி அனுசரிப்பார்களோ இவனுடைய தலைவாசலை வந்து காத்துக் கொண்டு இவனுடைய சமூகம் பார்த்து காத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அவன் வாசலிலே தூதன் சொல்லுகிறான். அடே மந்திரியே உங்களுடைய வார்த்தைகளானதுகள் எங்கள் நஞ்ச ராசாவினுடைய பாதார விந்தகத்தைப் போய்ச் சேருதுகள். யாதொருத்தன் இதைக் கேட்டு அதிகமாக செவிடனாக ஆனானோ அவன் உங்களை நிந்திக்கிறான். இவன் மனுஷர்களுக்குள்ளே துட்ட மனசாயிருக்கிற பேர்களை இந்த நஞ்ச ராசாவானவன் நிந்திக்கிறான். திரவிய முதலாக இருக்கிற வஸ்துக்களுடைய நிச்சயத்திலே மெத்தவும் பெரிசாயிருக்கிறவர்களையிறுக்கிறார்கள். பின்னையும் நஞ்ச ராசாவினுடைய சப்ரமத்தியிலே வந்து சிறிது கவிகள் விசுவாசத்தையுடைத்தான பேர்களாக ஆனார்கள். இப்போ நஞ்ச ராசா முன் ராச்சிய பாரம் செய்த போச ராசாவுக்கு சமமாக இருக்கிறான்.

இந்த நஞ்ச ராசாவினுடைய பாதத்தை சேவிக்கிறதானது வருகிற ராசாக்களுடைய மனசை பரவசமாகப் பண்ணுகிறது வெகு நல்ல வார்த்தை சொல்லுகிறார்கள். திருவிழாவிலே தெய்வத் தினுடைய சிறப்பு போலே மகா சிறப்பையுடைத் தானவன். எதிரி ராசா ஒருத்தன் சொல்லுகிறான். எவ்வளவு தான் என்னுடைய சரீரத்திலே மயிர்க்குச் சரீரத்தைப் பார்த்து மனதிலே கோபத்தை பண்ணமாட்டாள்.

நஞ்ச மகா ராசாவினுடைய புசபலத்தை நினைத்துக் கொண்டுமாத்திரம் அவனுடைய சூரத்தை அலங்காரமாகப் பண்ணிக் கொள்ளு கிறார்கள். நஞ்ச மகா ராசாவினுடைய கத்தி நிறம் போலே நிறத்தையுடைத்தாயிருக்கிற இருட்டி னுடைய சமூகத்துக்கு இராத்திரி காரணமான படியினாலே இராத்திரியுமிவனுக்கு வசமாச்சுது. அந்த இருட்டுப் போலே கருத்திருக்கிற பெண்களுடைய மயிர்வாசனையிலே வீசிப் பக்கத்திலேயும் வாயு வானவன் வீசுகிறான்.

வணங்கயிருக்கிற பொல்லாதவரை திர இருட்டுக்கு சூரியன் போலேயிருக்கிற நஞ்ச ராசாவினுடைய சேவுகள்நாங்கள் ஆகிவிட்டோம். ஆனபடி வாரீர் ராசாக்களே எங்கே பூமியிலே சுத்துநீர்கள். உங்களை ரட்சிக்கிறத்திலே உபாயத்தை தேடிக் கொண்டு ஓடிப் போங்கள். பர ராசாக்கள் சிறிது பேர்கள் சொன்னார்கள். மகத்துவமாயிருக்கிற நஞ்சராசனுடைய நல்ல குணத்தை சொல்லுகிற சமயத்திலே ராச குமாரிகள் தாம ராகளுடைய முன்னே காதினாலே கேட்டு அடிக்கடி கால் நுனியினாலே பூமியை கீறுகிறார்கள். சத்துரு ராசாக்களினாலே பூமியிலே அறுப்பட்டு வீழ்ந்து கிடந்த சமயத்திலே சூரனாயிருக் கிறவனுடைய பிள்ளையாயிருக்கப்பட்ட நஞ்ச ராசாவினுடைய சேனையிலே சேவுகளுக்குச் சேவுகர் நான். விடுவனா என்கிற வார்த்தையுமில்லை. வில்லிலே இருந்து நாணை இழுக்கிறதுமில்லை. புருவ நெருப்பாக கோபம் பண்ணுகிறதுமில்லை.

ஒருத்தருக்கொருத்தர் சந்திக்கிறதுமில்லை. இது பரமசிவனுடைய சூரூபமாயிருக்கிற சிவராம குருவினுடைய பாதாரம் விந்தம் மகிமையினாலே வந்திருக்கிற சகாயமில்லாதா கியதை நந்தியினுடைய பிரபந்தத்துக்கு சந்தோஷப்பட்டு சமத்தவித்து வசனங்களாலே கொண்டாடத்தக்கதாயிருக்கிற ரசத்தோடே கூட்டியிருக்கிற கவிதையிலே பிரவேசித்திருக்கிற நரசிங்க கவியினாலே செய்யப்பட்ட நஞ்ச ராசய சோபூஷணத்திலே அலங்காரப் பிரகட மத்தியிலே காவியத்தைக் காண்பிக்கிறதிலே ரெண்டா முல்லாச முடிந்தது.

மேல் உல்லாசத்திலே துவனியானது காரணம் காண்பிக்கப்படுகிறது. அந்தத் துவனி இரண்டு விதம். லட்சண மூலமென்றும், சத்தி மூலமென்றும், திரும்பவும் மூன்று விதம், விட்ட லட்சணமென்றும் விடாத லட்சணமென்றும், விட்டும் விடாத லட்சணமென்றும் இப்படியிருக்கும். நஞ்ச ராசா வினுடைய கீர்த்தியும் பிரதாபமும் பூமண்டலத்திலே எங்கும் நிறைந்திருந்த சமயத்திலே ஆகாசத்திலே யிருக்கிற சந்திர சூரியனுடைய காந்திகளும் முழுங்கிப் போய் விட்டது. யாதொரு பெண்ணானவள் நூதனங்களான விளையாட்டினாலே நஞ்ச ராசாவாலே உல்லாசமாக செய்யப்பட்டாளேயோமாகில் அவளுக்கு ஒரு காலும் அவளுடைய நாயகனாலே எந்நேரமும் அனுபவிக்கப்பட்டிருக்கிற சௌந்தரியமெல்லாம் போச்சுது இது நிச்சயம்.

தாமாசபுட்சம் போலே கண்ணையுடைத் தானவளே முன்னே உன்னாலே காணப்பட்டதை ஈத்தைப் பார். களூல குலத்துக்கு சந்திரன் போலேயிருக்கிற யாதொரு நஞ்ச ராசாவினுடைய காங்கையை போக்கடியா நின்ற சது சட்டி கலையினாலே நிறைஞ்சுயிருக்கிற பவரனை அம்மாவாசையிலே உண்டாயிருக்கின்ற சந்திரன் போலே கலையிலே நஞ்ச ராசாவானவன்.

இதிலே உலகத்தினுடைய காங்கையை போக்கடிக்கிறதிலே அர்த்தம் சமானமாக கலையினாலே நிறைக்கப் பட்டவன் என்கிறதிலே சப்தம் சமானம் அந்த இரண்டும் ராகா சந்திர ஈவேமானது தீனமாகிற அக்கியினிலே தாபம் செய்யப்பட்டிருக்கிற பேர்களுக்கு பூமிக்கு நாயகன் நஞ்ச ராசா சூரமாகிற சந்தாபத்தினுடைய கூட்டமாகிற வீடுகளைப் பண்ணுகிறான். பூமிக்கு இதிலே சூரமானது சூரத்தை அரிச்ச போர்களுக்கு பிரதாபந்தானே அறியப்படுகிறது என்று உபமான ரூபங்களுக்கு சந்தேக சங்கான கூட்டம் இதிலே உவகாரத்தினாலே தானாட்டு உபத்திரவத்தினாலே தானாகட்டும் நிச்சயம் வேறே ஒண்ணுக்கு மில்லையென்று சந்தேகாலங்காரம் தானே நிச்சயிக்கப்பட்டுள்ளது. உபத்திரவத்தோடே கூடியிருக்கிற நிச்சயமான திருக்கச்சேயும் சந்தேக நிவர்த்தியிலாச்சுது. அதிலே உபகாரமெப்படி காந்தியினாலே முழுங்கப்பட்டிருக்கிற இருட்டை

யுடைத்தாயிருக்கிற நஞ்சபூபாலனுடைய இருட்டை கீர்த்தியாகிற சந்திரனைப் பிடித்துக் கொண்டு சமத்த சனங்களும் உட்ணத்தை ரொம்ப தூரத்திலே விட்டு விடுகிறார்கள்.

சந்திரன் போலே களையிலே நஞ்சராசா வானவன். இதிலே உலகத்தினுடைய காங்கையை போக்கடிக்கிறதிலே அர்த்தம் சமானமாக கலையினாலே நிறைக்கப்பட்டவன் என்கிறதினாலே சப்தம் சமானம் அந்த இரண்டும் ராகா சந்திர ஈவேமானது தீனமாகிற அக்கினியிலே தாபம் செய்யப்பட்டிருக்கிற பேர்களுக்கு பூமிக்கு நாயகன் நஞ்ச ராசா சூரமாகிற சந்தா பத்தினுடைய கூட்டமாகிற வீடுகளைப் பண்ணுகிறான்.

பூமிக்கு இதிலே சூரமானது சூரத்தை அரிச்ச பேர்களுக்கு பிரதாபந் தானே அறியப்படுகிறது என்று உபமான ரூபங்களுக்கு சந்தேக சங்கான கூட்டம் இதிலே உபகாரத்தினாலே தானாட்டு உபத்திரவத் தினாலே தானாகட்டும். நிச்சயம் வேறே ஒண்ணுக்குமில்லையென்று சந்தேகாலங்காரம் தானே நிச்சயிக்கப்பட்டுள்ளது. உபத்திரவத்தோடே கூடியிருக்கிற நிச்சயமான திருக்கச்சேயும், சந்தேக நிவர்த்தியிலாச்சுது. அதிலே உபகாரமெப்படி காந்தியினாலே முழுங்கப்பட்டிருக்கிற இருட்டை யுடைத்தாயிருக்கிற நஞ்ச பூபாலனுடைய இருட்டை கீர்த்தியாகிற சந்திரனைப் பிடித்துக் கொண்டு சமத்த சனங்களும் உட்ணத்தை ரொம்ப தூரத்திலே விட்டு

விடுகிறார்கள். இதிலே கீர்த்தி தானே சந்திரன் என்ற இந்த உபகாலங்காரத்திலே உட்ணத்தை விடுகிறது. உபகாரமே நிச்சயம் உபத்திரவமெப்படி சமத்த தேவப் பெண்களுடைய கானத்தினாலே மறைந்திருக்கிற வியாபாரத்தை யுடைத்தாயிருக்கிறான்.

அர்த்த அலங்காரங்களுக்கு வியாபாரம் எப்படி அம்போ ராசியினுடைய சமுத்திரத்தினுடைய பாலசலங்களை பிபேந கூடியா நிண்ணிருக்கு சாவுக்கு ஆசையை கொடா நின்ற இந்தப் பூமியைப் பாரென்று ஒரு ராசகுமாரியைப் பார்த்து ஒரு தோழி சொல்லுகிற வார்த்தை நஞ்ச ராசாவானவன் துர் மனுஷர்களுடைய துட்ட வார்த்தையை என்ன பிரகாரத்தினாலே ஒப்புக்கொள்ள மாட்டாதபடியினாலே சத்துரு ராசாக்களுடைய பேச்சையொப்பாமே பொறுப்பான். அதினாலே அவர்கள் அனைவரும் மிகவும் வனத்துக்குப் போய்விட்டும். ஒரு தோழன் நஞ்ச ராசாவைப் பார்த்து ஒரு பெண்ணை ரட்சியென்று சொல்லுகிற வார்த்தை. வாரீர் ராச ராசாவே தொங்குகிற ஆறணூல மாலையும் அதுமாகப் பிரகாசித்திருக்கிற மயிர்க் குழக்கற்றையும் தோணுகிற ஸ்தனங்களையும் நல்ல குணத்தினாலே அலங்கரிக்கப்பட்டு ராச்சிய பாரம் செலுத்தி மகிமையை அடைகிறதற்கு ஏதுவாகியும் இப்படி இதுகளினாலே அலங்கரிக்கப்பட்டிருக்கிற வசுமதி யென்கிற பெண்ணை ரட்சித்தக கொள்ள வேணும். சலத்தை தாண்டரத்திலே யுத்தத்திலே நஞ்ச ராசாவானவன் போமூட உன்னை குரங்காக

நினைக்கிறான். உன்னுடைய வெகு வார்தைகளிலே யாதொரு காரணத்தினாலே சாமர்த்தியந் தோண வில்லையோ. ஆனபடியினாலே மகத்தாயிருக்கின்ற சண்டையிலே உன்னை குரங்காக நினைக்கிறான். கன்னிய லக்கினத்திலே பிறந்தவளாகிய இந்தப் பெண் சஞ்சலங்களாயிருக்கிற கடைக்கண்களினாலே விளையாட்டாக மிகவுங் காடின்னியத்தை உடைத்தா யிருக்கின்றான். தன்னுடைய பிரசித்துச்சி உனக்கு எங்கேயிருக்கு. என்னைப் போலே நீயாத்த சுணங்களிடத்திலே ஆச்சரியம். வஞ்சனைப் பண்ணப்பட்டது. இவ்விடத்திலே வாரீர் சுவாமி நஞ்ச ராசாவே உம்மாலே எவளிருக்கின்றாள்.

இந்நூல் முற்றுப் பெறவில்லை.

நஞ்ச ராசன் கதை முற்றும்.

*****